Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.16/2025

Deposition of CW1

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.M.Geetha | Village | : |
| Father's / Husband's Name | : T.Muthurangam | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 03rd day of December 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை கீழ்பாக்கம் அரசு மனநல மருத்துவமனையில் உதவி பேராசிரியையாக பணிபுரிந்து வருகின்றேன். இவ்வழக்கில் இந்நீதிமன்றத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி எதிரி.கணேசன், த/பெ.சண்முகம், வயது 53 அவர்கள் என் முன்பாக 04.09.2025 அன்று மனநல பரிசோதனைக்காக முன்னிலை படுத்தப்பட்டார். அவர் ஏற்கனவே சிவில் பேசன்டாக 2021 ஆம் ஆண்டில் எங்களது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார். அவருடைய பழைய சிகிச்சை கோப்புக்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அவருக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் மனநிலை ஆய்வு செய்யப்பட்டது. அவரை எங்களது மருத்துவமனையில் 04.09.2025 அன்று இந்த ஆய்வுக்காக அனுமதித்தோம். அவர் 04.09.2025 முதல் 31.10.2025 வரை 58 நாட்கள் என்னுடைய மருத்துவ கண்காணிப்பில் இருந்தார். அவர் சிகிச்சைக்கு வந்தபொழுது நடந்து வந்தார், அவருக்கு புரிதல் இருந்தது, கண்ணை பார்த்து பேசினார், மருத்துவ பரிசோதனைக்கு ஒத்துழைப்பு கொடுத்தார். அவருடைய செயல்பாடுகள் அனைத்தும் நார்மலாக இருந்தது. கேட்கப்படும் கேள்விகளுக்கு புரிந்துகொண்டு பதில் அளிக்கும் நிலையில் இருந்தார். அவர் சிகிச்சையில் இருந்தபொழுது அவரது மனநிலை பற்றிய ஒரு முடிவுக்கு வர District Mental Health Review Board, கூட்டத்தில் இவரது மருத்துவ பரிசோதனை முடிவுகளை

வைத்து ஒரு அப்ரூவல் வாங்குவதற்காக 58 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். இவர் சிகிச்சையில் இருந்தபொழுது சிகிச்சைக்கு ஒத்துழைப்பு கொடுத்தார். தன்னுடைய தேவைகளான சாப்பிடுவது, குளிப்பது போன்றவற்றை சரியாக செய்தார். நன்றாக தூங்கினார். 28.10.2025 அன்று Review Board ல் இவரது கோப்புகள் வைக்கப்பட்டு டிஸ்ஜார்ஜ்க்கு தகுதியான நபர் என்று கருத்துரை பெறப்பட்டது. அவர் நீதிமன்ற நடவடிக்கைகளை புரிந்துகொள்ளும் அளவிற்கு அவரது மனநிலை இருந்தது. அவருக்கு எதிரான வழக்கில் எதிர்வழக்காடக்கூடிய நிலையில் அவரது மனநிலை இருக்கின்றது என்று நானும், எங்களது பிரிவு தலைவரும் ஒரு சான்று அளித்தோம். அது **நீ.ம.சா.ஆ.1**.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

28.10.2025 க்கு பிறகு அவரது மனநிலையில் என்ன மாற்றம் இருக்கின்றது என்பது பற்றி என்னால் தற்பொழுது கூறமுடியாது. இந்த 58 நாட்கள் சிகிச்சையின்போது அவருக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டது. அவருக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டு மனநிலை சீரான பின்பு தான் அவர் டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டார்.

**மறுவிசாரணை இல்லை.**